தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### சுயஉதவி குழுக்களுக்கு முழு மானியத்தில் வேளாண் கருவிகள்

மகளிர் குழுக்கள் பயனடையும் வகையில் முழு மானியத்தில் வேளாண் கருவிகள் வழங்கும் வகையில் வேளாண்மை துறை சார்பில், அம்மா பண்ணை மகளிர் திட்டத்தை செயல்படுத்த அரசு உத்தரவிட்டுள்ளது. தமிழகம் முழுவதும் வேளாண்துறை சார்பில் நீர்வள, நிலவள மேம்பாட்டு திட்டம், மேற்குத் தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டம், விதை மற்றும் இடுபொருள்கள், கால்நடை தீவன விதைகள் வழங்குதல் உள்ளிட்ட பல்வேறு வகையான மானியத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. விதை நடுதல், களை எடுத்தல், அறுவடை மேற்கொள்ளுதல், காடுகளில் புற்களை அப்புறப்படுத்துதல், கால்நடை வளர்த்தல் போன்ற பணிகளில் ஆண்களை விட மகளிரே அதிகம் ஈடுபடுகின்றனர். இதைக் கருத்தில் கொண்டு மகளிரின் வேலைப்பளுவை குறைக்கும் வகையிலும், உற்பத்தி செய்யப்பட்ட தானியங்களை மதிப்பு கூட்டப்பட்டவைகளாக்கி அதிக லாபம் பெறும் வகையிலும் அம்மா பண்ணை மகளிர் மேம்பாட்டு திட்டத்தை செயல்படுத்துவதற்கு அரசு உத்தரவிட்டுள்ளது. தற்போது, இதற்கான பணிகளில் வேளாண்மை துறையினர் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர். இத் திட்டத்தில், முதலில் கிராமங்களில் மகளிர் சுய உதவிக் குழுவை ஏற்படுத்த வேண்டும். வேளாண் தொழில் ஆர்வமுடைய, தானியச் சாகுபடியில் ஈடுபடும் சிறு, குறு விவசாயிகள் என 20 பெண்கள் குழுவில் இருக்க வேண்டும். தலைவர், செயலர், பொருளாளர் ஆகியோரை உறுப்பினர்களே தேர்வு செய்து கொள்ளலாம். இக்குழுக்கள் செயல்பட தொடங்கியதும் வேளாண் துறையின் திட்டங்கள் அனைத்தும் முழு மானியத்தில் அளிக்கப்பட இருப்பதாக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். இது குறித்து வேளாண்மைத்துறை இணை இயக்குநர் கே.சுப்பையா கூறுகையில், அம்மா பண்ணை மகளிர் மேம்பாட்டு

திட்டத்தை விருதுநகர் மாவட்டத்தில் 11 ஊராட்சி ஒன்றியங்களிலும் தலா ஒரு கிராமத்தில் முதல் கட்டமாக செயல்படுத்தவுள்ளோம். 20 பேர் கொண்ட மகளிர் குழுவை அமைக்கவும், அதற்கான வரைமுறைகள் குறித்து பயிற்சி அளிக்கவும் ரூ.3.60 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

குழு உறுப்பினர்களுக்கு வேளாண்மை துறையின் திட்டங்கள் அனைத்தும் முழு மானியத்தில் அளிக்கப்படும். நீர்வள நிலவள மேம்பாட்டு திட்டத்தின் மூலம் தானிய சாகுபடி அதிகரித்து அதை மதிப்பு கூட்டப்பட்ட பொருள்களாக தயார் செய்வதற்காக தானிய சுத்திகரிப்பு இயந்திரம் நிறுவுவதற்கு ரூ.1.22 லட்சம் மானியம் அளிக்கப்படுகிறது. இதேபோல், 11 மகளிர் குழுக்களுக்கு தலா ரூ.1.22 லட்சம் வீதம் அரசு ஒதுக்கீடு செய்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## வெள்ளக்கோவிலில் நெல் கொள்முதல் மையம் திறப்பு

வெள்ளக்கோவிலில் தமிழக அரசின் நேரடி நெல் கொள்முதல் மையம் திங்கள்கிழமை திறக்கப்பட்டது. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் சார்பில், காங்கயம் சாலையிலுள்ள ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்தில் செயல்படும் இந்த மையத்தை சட்டப்பேரவை துணைத் தலைவர் பொள்ளாச்சி வி.ஜெயராமன் திறந்து வைத்தார். தாராபுரம் கோட்டாட்சியர் சரவணக்குமார் தலைமை வகித்தார். கூட்டுறவு கட்டட சங்கத் தலைவர் டீலக்ஸ் ஆர்.மணி வரவேற்றார். ஈரோடு மக்களவை உறுப்பினர் எஸ்.செல்வக்குமார சின்னையன், காங்கயம் சட்டப் பேரவை உறுப்பினர் என்.எஸ்.என்.நடராஜ், ஊரக வளர்ச்சி வங்கி மாநில இயக்குநர் எஸ்.என்.முத்துக்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். நகர்மன்றத் தலைவர் வி.கந்தசாமி நன்றி கூறினார். முத்தூர், வேலம்பாளையத்திலும் நெல் கொள்முதல் மையங்கள் திறக்கப்பட்டன.

## மண்புழு உரம் தயாரிக்க இலவசப் பயிற்சி

நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில் மண்புழு உரம் உற்பத்தி செய்யும் முறை குறித்த ஒரு நாள் இலவசப் பயிற்சி வரும் 20-ஆம் தேதி

நடைபெற உள்ளது. ஆர்வமுள்ள விவசாயிகள் பங்கேற்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. வேளாண் அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் பி.மோகன் வெளியிட்ட செய்தி: நாமக்கல்-மோகனூர் சாலையில் உள்ள கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய வளாகத்தில் செயல்பட்டு வரும் வேளாண் அறிவியல் நிலையத்தில் இந்தப் பயிற்சி அளிக்கப்படவுள்ளது. மண்புழு உரம் தயாரிக்கும் இடம் தேர்வு, மண்புழுவைத் தேர்வு செய்தல், தொட்டி மற்றும் குவியல் முறையில் மண்புழு உரம் தயாரித்தல், பயிர்க் கழிவுகள், நகரக் கழிவுகள் மற்றும் கோழிக் கழிவுகளில் இருந்து மண்புழு உரம் தயாரித்தல், ஒவ்வொரு வேளாண் பயிர்களுக்கும் மண்புழு உரப் பரிந்துரை அளவு, மண்புழு உரத்தின் நன்மைகள், மண்புழு ஊட்ட நீர் தயார் செய்யும் முறை, அதனைப் பயிர்களுக்குத் தெளிக்கும் அளவு முறை குறித்து செயல்முறை விளக்கத்துடன் பயிற்சி அளிக்கப்படும். பயிற்சியில் சேர விருப்பமுள்ள விவசாயிகள், பண்ணையாளர்கள், ஊரக மகளிர், இளைஞர்கள் நேரில் வந்தோ அல்லது 04286-266345, 266244, 266650 என்ற தொலைபேசி எண்கள் மூலமாகவோ வரும். 19-ஆம் தேதிக்குள் பெயரைக் கண்டிப்பாக முன்பதிவு செய்து கொள்ள வேண்டும். பயிற்சிக்கு வரும் விவசாயிகள் தங்களுடைய ஆதார் எண்ணை கண்டிப்பாகப் பதிவு செய்ய வேண்டும்.

## <u>வேளாண் அறிவியல் நிலையத்தில் மஞ்சள் கொத்து அறுவடை</u>

பொங்கல் பண்டிகையை முன்னிட்டு, காரைக்கால் வேளாண் அறிவியல் நிலையத்தில் இயற்கை உரத்தில் பயிரிடப்பட்ட மஞ்சள் கொத்து அறுவடை திங்கள்கிழமை நடைபெற்றது. தோட்டக்கலை பயிராக கூறப்படும் மஞ்சள் 5 மாத பயிராகும். இது பொங்கல் பண்டிகைக்காக காரைக்கால் வேளாண் அறிவியல் நிலைய பண்ணையில் சுமார் 50 சென்ட் நிலப்பரப்பில் பயிரிடப்பட்டது. இதன் அறுவடை திங்கள்கிழமை நடைபெற்றது. பணியை பார்வையிட்ட வேளாண் அறிவியல் நிலையத் தலைவர் ஆ.சுரேஷ் கூறியது: நிலைய பண்ணையில் மஞ்சள்

பயிரிடப்பட்டு, காரைக்கால் மாவட்டத்தை சேர்ந்த விவசாயிகள் பலரை அழைத்து நேரடி செயல் விளக்கம் அளிக்கப்பட்டது. மஞ்சள் பயிர் செய்யும் காலம், சேதமின்றி வளர்க்கும் முறை, இயற்கை முறையில் உரமிடுதல், தண்ணீர் தேவை குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி தரப்பட்டுள்ளது என்றார். அறுவடை பணியின்போது நிலைய முதல்வர் ந. ராஜேந்திரன், உழவியல் தொழில்நுட்ப வல்லுநர் செந்தில்குமார், கால்நடை தொழில்நுட்ப வல்லுநர் கோபு, பண்ணை மேலாளர் ஆண்டனி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**<u>புதிய தொழில்நுட்பத்தில் ரப்பர் மரக்கன்று</u>**

புதிய தொழில்நுட்பத்தில் உருவான ரப்பர் மரக்கன்றை அரசு ரப்பர் கழக நிர்வாக இயக்குநர் கயரத் மோகன்தாஸ் திங்கள்கிழமை அறிமுகம் செய்தார். குமரி மாவட்டத்தின் வளர்ச்சிக்கும், பொருளாதார முன்னேற்றத் துக்கும் ரப்பர் விவசாயம் முக்கிய இடம் வகிக்கிறது. விஞ்ஞான ரீதியாக ரப்பர் பயிரிடப்பட்ட பின் அத்துறையில் ஏராளமான கண்டுபிடிப்புகள் மற்றும் தொழில்நுட்பங்கள் புதிதாக அறிமுகப்படுத்தப் பட்டு வருகின்றன. ரப்பர் மரக்கன்றுகளை உருவாக்கும் நாற்றங்கால், தோட்டப் பராமரிப்பு, ரப்பர் பொருள்கள் தயாரிப்பு என இத்துறையில் பல பிரிவுகள் உள்ளன. இதில் நடவு செய்ய ரப்பர் மரக்கன்றுகள் உருவாக்கும் நாற்றங்கால் பிரிவு முக்கியமானது. ரப்பர் நாற்றங்காலில் உருவாக்கப்படும் மரக்கன்றுகளின் தரத்தைப் பொருத்தே நடவு செய்யப்படும் மரங்கள், தோட்டங்களைச் சிறப்பாக பராமரிக்க முடியும். ஏற்கெனவே பல தொழில்நுட்ப முறைகள் இப்பிரிவில் இருந்தாலும், எளிமையான, செலவு குறைந்த, தரமான சாதாரண விவசாயியும் மேற்கொள்ள கூடிய புதிய தொழில்நுட்பம் உருவாக்கும் முயற்சிகள் நடைபெற்றன. இப்போது டி.எஸ்.கப் நர்சரி என்ற புதிய தொழில்நுட்பம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. கன்னியாகுமரி அருகே பஞ்சலிங்கபுரத்தைச் சேர்ந்த விஞ்ஞானி முத்துஐயப்பன் இதை கண்டுபிடித்துள்ளார். இவர் அரசு ரப்பர் கழகத்தில் கள அலுவலராகப் பணியாற்றி வருகிறார்.

இதுகுறித்து அவர் கூறியது: ஏற்கெனவே பழக்கத்தில் உள்ள நாற்றங்கால் முறையான பாலிதீன் கூடு மற்றும் ரூட் டிரெய்னர் எனப்படும் கப்பு செடிகளுக்கு மாற்றாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இப்புதிய முறை டி.எஸ். கப் என்ற பெயரில் வடிவமைக்கப்பட்ட பிளாஸ்டிக் கப் மூலம் மேற்கொள்ளப்பட்டது. இந்த கப்பின் வடிவமைப்பு பழைய நாற்றங்கால் முறைகளில் உள்ள குறைகளைக் களையும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் குறுகியகால அளவில் தரமான ரப்பர் மரக்கன்றுகளைத் தயாரிக்க, புதிய நாற்றங்காலுக்கு குறைந்த அளவிலான இடமே தேவை. இதன்மூலம் குறுகியகால அளவில் தரமான ரப்பர் மரக்கன்றுகளைத் தயாரிக்க முடியும். ரப்பர் மரக்கன்றுகளை நடவுக்கு எடுத்து செல்வதும் எளிமையாக்கப்பட்டுள்ளது. எடுத்து செல்வதில் ஏற்படும் சேதமும் குறைகிறது. வேர்களின் வளர்ச்சிக்கு சிறப்பு முக்கியத்துவம் உள்ள இத்தொழில்நுட்ப முறையில் மூலம் நடவு செய்யப்படும் கன்றுகள் பலத்த காற்று, வறட்சியைத் தாக்குப்பிடிக்கும் அளவுக்கு வளர தரம் மேம்படுத்தப்பட்டுள்ளது. இதை மாடித் தோட்டமாகவும் பயன்படுத்த முடியும். எளிதில் கையாளக்கூடியது. இதனுடன் ஊடுப் பயிராக தோட்டப் பயிர்களான ஆரஞ்சு உள்ளிட்ட எல்லா பயிர்களும் பயரிடலாம் என்றார். புதிய தொழில்நுட்பத்தில் இவர் உருவாக்கிய ரப்பர் மரக்கன்றை, நாகர்கோவிலில் அரசு ரப்பர் கழக நிர்வாக இயக்குநர் கயரத் மோகன்தாஸ் அறிமுகம் செய்து வெளியிட்டார். அதை பொதுமேலாளர் நாகநாதன் பெற்றுக்கொண்டார். தொழிலாளர் நல்லுறவு அலுவலர் ரங்கநாதன், விஞ்ஞானி முத்து ஐய்யப்பன் ஆகியோர் உடனிருந்தனர்.

தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

## விவசாயிகளுக்கு தாராளமாக கடனுதவி வங்கிகளுக்கு கலெக்டர் வேண்டுகோள்

தஞ்சாவூர்: "விவசாயிகளுக்கு, கடனுதவியை தாராளமாக வழங்க வேண்டும்," என்று கலெக்டர் சுப்பையன் தெரிவித்தார். இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, நபார்டு வங்கி சார்பில், தென்னை சாகுபடியில் ஊடுபயிர் மற்றும் ஒருங்கிணைந்த பண்ணையம் குறித்த கருத்தரங்கம், தஞ்சையில் நடந்தது. கலெக்டர் சுப்பையன் தலைமை வகித்து பேசியதாவது: ஊடுபயிர் சாகுபடி லாபம் தரக்கூடிய தொழில். விவசாயிகள் தென்னை சாகுபடியில் அதிக இடைவெளி விட்டு பயிரிடுவர். இடைப்பட்ட பகுதியில், ஊடுபயிராக பல்வேறு பயிர்களை பயிரிடுவதற்கு அதிகளவில் வாய்ப்புள்ளது. விவசாயிகள் வேளாண்மை துறை, தோட்டக்கலைத்துறை, கால்நடை பராமரிப்புத்துறை ஆகிய வற்றின் ஆலோசனை பெற்று ஊடுபயிர் பயிரிடலாம். மாவட்டத்தில் போதியளவு நிலத்தடி நீர் உள்ளது. பருவமழையும் கை கொடுக்கும் இந்த காலத்தில், எந்த ஒரு பகுதியையும் விவசாயம் செய்யாமல் காலியாக வைக்கக்கூடாது. புறம்போக்கு நிலங்களாக இருந்தாலும், உரிய அனுமதிகளை பெற்று அவற்றிலும் பயிர் உற்பத்திகளை மேற்கொள்ள வேண்டும். தஞ்சை மாவட்டம், உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெற வேண்டும். விவசாயிகளுக்கு வேண்டிய கடனுதவிகளை வங்கிகள் தாராளமாக வழங்க வேண்டும். அரசுத்துறை அலுவலர்களும், விவசாயிகளுக்கு வேண்டிய ஆலோசனை, தொழில்நுட்ப அறிவுரை வழங்க வேண்டும். தஞ்சை மாவட்டம், மட்டுமின்றி பிற மாவட்டங்களில் இருந்து அல்லது வெளிநாடுகளில் இருந்து உயர் தொழில்நுட்பங்களை

பெற்று, விவசாயிகளுக்கு வழங்க வேண்டும். இவ்வாறு தெரிவித்தார். கருத்தரங்கில், இந்தியன் ஓவர்சீஸ் வங்கி முதுநிலை மண்டல மேலாளர் சித்தார்த்தன், நபார்டு வங்கி மாவட்ட வளர்ச்சி மேலாளர் சுப்பிரமணியன், திட்ட இயக்குனர் சீனிவாசன், வேளாண்மைத் துறை இணை இயக்குனர் சேகர் உட்பட பலர் பங்கேற்றனர்.

## <u>சித்தோடு வெல்ல மண்டிக்கு 12 ஆயிரம் மூட்டைகள் வரத்து</u>

ஈரோடு : பொங்கல் பண்டிகைக்கு, சில நாட்களே உள்ள நிலையில், சித்தோடு வெல்லமண்டிக்கு நாட்டு சர்க்கரை, வெல்லம் உள்பட, 12,000 மூட்டைகளை, விவசாயிகள் விற்பனைக்காக கொண்டு வந்தனர். சித்தோடு ஏலமண்டியில், வாரந்தோறும், சனியன்று நாட்டு சர்க்கரை, வெல்லம் விற்பனை செய்ய, ஏலம் நடக்கிறது. ஈரோடு மாவட்டத்தில் பவானி, அம்மாபேட்டை உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில், தர்மபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களை சேர்ந்த கூலித்தொழிலாளர்கள் வெல்லம் உற்பத்தி பணிகளில், ஈடுபட்டு வருகின்றனர்.நேற்று முன்தினம் நடந்த ஏல விற்பனையில், மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் இருந்து, 60 கிலோ கொண்ட நாட்டு சர்க்கரை, 30 கிலோ கொண்ட மூட்டை, அச்சு வெல்லம் மற்றும் உருண்டை வெல்லம் என, 12,000 மூட்டைகள், விற்பனைக்காக கொண்டு வரப்பட்டன.அச்சு வெல்லம் அதிகபட்சமாக, 1,350 ரூபாய் வரையிலான விலையில் விற்பனையானது. உருண்டை வெல்லம், முதல் தரம், அதிகபட்சமாக, 1,150 ரூபாய் வரையும், நாட்டு சர்க்கரை, 60 கிலோ மூட்டை, அதிகபட்சமாக, 1,800 ரூபாய் வரை, ரகத்துக்கு ஏற்ப விற்பனை செய்யப்பட்டன. கடந்தாண்டு, பொங்கல் பண்டிகையை முன்னிட்டு, நாட்டுச்சர்க்கரை, வெல்லம் விலை உயர்ந்த நிலையில், இந்தாண்டு மகாராஷ்டிரா, ஆந்திரா உள்ளிட்ட மாநிலங்களை சேர்ந்த விவசாயிகள், தமிழகத்தில் இருந்து அதிகளவில் நாட்டு சர்க்கரை, வெல்லம் ரகங்களை கொள்முதல் செய்து வந்தனர்ஆனால், இந்தாண்டு

அபரிமிதமான உற்பத்தியால், வெளிமாநில மார்க்கெட்டுகளுக்கு, வெல்லம் வரத்து அதிகரித்துள்ளது. இதனால் பொங்கல் பண்டிகை நெருங்கி வரும் சூழ்நிலையில், கிராக்கி இல்லாதததால், விலை உயரவில்லை, என வியாபாரிகள் தெரிவித்தனர்.

**விவசாயிகளுக்கு 50 சதவீத மானிய விலையில் விதைகள் வழங்க திட்டம்**

குன்னூர் : வேளாண் விரிவாக்க திட்டத்தின் கீழ், விவசாயிகளுக்கு, 50 சதவீத மானிய விலையில் விதைகள் வழங்கப்பட உள்ளன. மாநில அரசின் தோட்டக்கலை துறை சார்பில், விவசாயிகளுக்காக நடத்தப்பட்டு வந்த, பயிற்சி வழி தொடர்பு திட்டம் நிறுத்தப்பட்டது. இதனை மறுமதிப்பீடு செய்து, விவசாயிகள் குழுக்கள் சார்ந்த வேளாண் விரிவாக்க திட்டம் என்ற பெயரில், நீலகிரி மாவட்டம் முழுவதும் புதிய திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. இதற்கான துவக்க விழா, குன்னூர் தோட்டக்கலை துறை சார்பில் கேத்தி கிராமத்தில் நடந்தது.விழாவுக்கு, எம்.பி., கோ ாபாலகிருஷ்ணன், ராஜ்யசபா எம்.பி., அர்ஜுனன், கேத்தி பஞ்சாயத்து தலைவர் மகேஸ்வரி, குன்னூர் தோட்டக்கலை உதவி இயக்குனர் ராம்சுந்தர் முன்னிலை வகித்தனர். இது குறித்து தோட்டக்கலை துறை அதிகாரிகள் கூறுகையில், "இந்த புதிய திட்டத்தின் மூலம், உதவி வேளாண்மை அலுவலர்கள் ஒவ்வொரு கிராமத்திற்கு நேரில் சென்று ஆய்வு செய்து அரசுக்கும், விவசாயிகளுக்கும் இணைப்பு பாலமாக விளங்குவர். காய்கறி விதைகள், வீரிய ஒட்டுரக விதைகள், தேயிலை நாற்றுகள் அனைத்தும், 50 சதவீத மானிய விலையில் வழங்கப்படுகிறது. பசுமைக்குடில்கள் அமைக்க மானியம் வழங்கப்படுகிறது. பசுமைக்குடில்களில் வளர்க்கும் செடிகள், காய்கறிகள், நாற்றுகள், கார்னேஷன் மலர் செடிகள் மானிய விலையில், கைத்தெளிப்பான், விசைத்தெளிப்பான், வேளாண் கருவிகளான முள், மம்பட்டி, மண்வெட்டி, கடப்பாறை ஆகியவையும் மானிய விலையில்

வழங்கப்படும்' என்றனர். விழாவில், கேத்தி சுற்றுப்புற விவசாயிகள் பங்கேற்றனர்.

## வெற்றிலை வள்ளிக்கிழங்கு கொடிகள் அமோக வளர்ச்சி

அவலூர்பேட்டை: அவலூர்பேட்டை அருகே வெற்றிலை வள்ளிகிழங்கு கொடி பச்சை பசேல் என அதிகளவில் படர்ந்துள்ளது. மேல்மலையனூர் ஒன்றியம் நொச்சலூர் அடுத்த மணியாந்தப்பட்டு கிராமத்தில் உள்ள சாலை அருகே விவசாயி ஒருவர் வெற்றிலை வள்ளி கிழங்கு பயிரிட்டுள்ளர். ஆறு மாதமான இந்த பயிர் , பங்குனி மாதத்தில் அறுவடைக்கு தயாரகும். இதன் கிழங்கு ஒரு கிலோ 15 முதல் 25 ரூபாய் வரையில் விலை போகும். மூன்று மாதங்கள் முடிவடைந்த நிலையில் இந்த கொடிகள் அடர்ந்து படர்ந்துள்ளன. இப்பகுதியில் இந்த வகை கிழங்குகளை விவசாயிகள் பெரும்பாலும் பயிரிடுவதில்லை. சாதாரணமாக பயிரிட்டதில் நன்றாக வளர்ந்துள்ளது. இதை முறையாக விவசாயம் செய்தால் நல்ல வருவாய் ஈட்டலாம். விவசாயிகளுக்கு வேளாண் துறை மற்றும் தோட்டக்கலை துறை அதிகாரிகள் லோசனைகளை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## விளைச்சல் குறைவால் விலை அதிகரிப்பு; ஒரு கரும்பு ரூ. 30 க்கு விற்பனை

சின்னமனூர் : தை பொங்கலுக்கு இன்னும் இரண்டு நாட்கள் உள்ள நிலையில் செங்கரும்பு விலை "டபுள்' ஆக கூடியுள்ளது. சில்லரையில் ஒரு கரும்பு 30 ரூபாய்க்கு விற்பனையாவதால், செங்கரும்பு பயிரிட்ட விவசாயிகள் "ஜாக்பாட்' அடித்த "குஷி'யில் உள்ளனர். சின்னமனூர் பகுதியில் ஆயிரம் ஏக்கரில் செங்கரும்பு பயிரிடப்பட்டுள்ளது. தை பொங்கலுக்கு ஒரு வாரத்திற்கு முன்பாக வெட்டும் காலத்தை கணக்கிட்டு, ஏப்ரல் துவக்கத்தில் பயிரிடப்படுகிறது. கடந்த ஆண்டு ஒரு கட்டு(10கரும்பு) 120 ரூபாய் முதல் 160 ரூபாய் வரை விற்பனையானது.

இந்த ஆண்டு செங்கரும்பு உற்பத்தி குறைந்ததால் கூடுதல் விலை கிடைக்கும் என்ற எதிர்பார்ப்புஇருந்தது. கடந்த ஆண்டு சில்லரை விற்பனையாளர்களால் 16 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்ட ஒரு கரும்பு, தற்போது 30 ரூபாய்க்கு விற்பனையாகிறது. இரட்டிப்பு விலை கிடைப்பதால் விவசாயிகள் "ஜாக்பாட்' அடித்த சந்தோஷத்தில் உள்ளனர். சின்னமனூர் கரும்பு விவசாயி முருகன் கூறுகையில், "கடந்த ஆண்டு அதிகபட்ச விலையாக ஒரு கட்டுக்கு 160 கிடைத்தது. இந்த ஆண்டு சபரிமலை செல்லும் பக்தர்களுக்காக கேரளா வியாபாரிகள் வாங்கிய கரும்பிற்கு குறைந்த விலையாக 160 நிர்ணயிக்கப்பட்டது. தை பொங்கலுக்கு இன்னும் இரண்டு நாட்கள் மட்டுமே உள்ளதால், கரும்பு விலை உச்சத்தை தொட்டுள்ளது. செங்கரும்பு குறைந்த அளவு உற்பத்தியாகியுள்ளதால், வயலில் வந்து ஒரு கட்டு 240 ரூபாய் வரை வாங்கி செல்கின்றனர். சில்லரையில் ஒரு கரும்பு 30 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. இந்த ஆண்டு உற்பத்தி குறைந்துள்ள நிலையில், நல்ல விலை கிடைப்பதால் கூடுதல் லாபம் கிடைக்கும்", என்றார்.

## <u>மா மரங்கள் பராமரிப்பு; விவசாயிகள் ஆர்வம்</u>

பெரியகுளம் : பெரியகுளத்தில் மாமரங்களில் பூக்கள் துளிர்விடுவதற்கு மருந்து அடிக்கும் பணி மும்முரமாக நடந்து வருகிறது. பெரியகுளம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளான சோத்துப் பாறை, கும்பக்கரை, ஈஞ்சமலை, செழும்பு, தொண்டைகத்தி, புலிக்கூடு, கோயில்காடு, முருகமலை, வறட்டாறு, கருங்கல் உட்பட பல பகுதிகளில் மா சாகுபடி ஐந்தாயிரம் ஏக்கரில் செய்யப்பட்டுள்ளது. தமிழகத்தில் தர்மபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களுக்கு அடுத்தபடியாக, தேனி மாவட்டம் பெரியகுளத்தில் மா சாகுபடி அதிகளவில் உள்ளது. நவம்பர், டிசம்பர், ஜனவரி மாதங்களில் மா பூக்கள் பூக்கும். முதல் கட்டமாக மரங்களுக்கு மருந்து அடிக்கும் பணியில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். மருந்து அடித்து சில வாரங்களில் பூ எடுக்கும், மார்ச்சில் மா பிஞ்சாகவும்,

ஏப்ரல் மாதம் மாங்காய் கிடைக்கும். பெரியகுளம் தோட்டக்கால் மண்ணிற்கு மல்கோவா, பங்கனபள்ளி,சப்போட்டா, காசாகாய், நாட்டுக்காய் உட்பட பல வகையான காய்கள் விளையும். பெரியகுளம் மண்ணிற்கு, இயற்கையாகவே மாங்காய்கள் சுவைத்தன்மை அதிகம் உள்ளது. மருந்து அடித்ததற்கு பின் குத்தகை, ஒத்தி உள்ளிட்டவைகளில் விவசாயிகள் ஆர்வம் காட்டுவர்.

## <u>வைகை, மஞ்சளாறு அணைகளில் முறை பாசனம்</u>

தேவதானப்பட்டி: வைகை அணையில் ஏற்கனவே முறைபாசனம் அமல்படுத்தப்பட்டுள்ள நிலையில் மஞ்சளாறு பாசனத்தில் முதல் போக சாகுபடிக்கு பாதிப்பு ஏற்படாமல் தவிர்ப்பதற்காக முறைநீர் பாசனம் அமல்படுத்தப்பட்டுள்ளது. அதன்படி வாரத்தின் முதல் மூன்று நாட்கள் பழைய ஆயக்கட்டு, நாகர்வள்ளி, மூங்கிலணை, புது அணைக்கட்டுப் பகுதிளுக்கு 50 மில்லியன் கன அடிநீர் திறக்கப்படுகிறது. நான்காம் நாள் நீர் திறப்பு அடைக்கப்படும். 5ம் நாள் முதல் தொடர்ந்து 4 நாட்களுக்கு வைரவன் அணை, கணவாய்பட்டி, பெரியக்குளம் அணை, குன்னு வராயன் கோட் டை உள்ளிட்ட பகுதிகளுக்கும் நீர்திறக்கப்படும். அதன் பிறகு 2 நாள் நீர் நிறுத்தப்படும். இதே போன்று புதிய ஆயக்கட்டுப் பகுதிக்கு 30 மில்லியன் கன அடி நீர் வீதம் ஒன்று முதல் 12 வது மடை வரை பகல் நேரங்களிலும். 13 வது மடைப் பகுதியான புல்லக்காபட்டி, எருமலைநாயக்கன்பட்டி, டி.வாடிப்பட்டி பகுதிகளுக்கு இரவு நேரங்களில் நீர் திறக்கப்படுகிறது.

## <u>இலவச மண்புழு தயாரிப்பு பயிற்சி</u>

நாமக்கல் : "இலவச மண்புழு தயாரிப்பு மற்றும் ஊட்டநீர் தயாரிப்பு பயிற்சி, வரும், 20ம் தேதி, வேளாண் அறிவியல் நிலையத்தில் நடக்கிறது' என, திட்ட ஒருங்கிணைப்பாளர் மோகன் தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்ட அறிக்கை: நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில்,

வரும், 20ம் தேதி, காலை, 9 மணிக்கு இலவச மண் புழு தயாரிப்பு மற்றும் மண்புழு ஊட்டநீர் உற்பத்தி பயிற்சி முகாம் நடக்கிறது. அதில், மண்புழு உரம் தயாரிக்கும் இடம் தேர்வு, மண்புழுவை தேர்வு செய்தல், தொட்டி மற்றும் குவியல் முறையில் உரம் தயாரித்தல், மண்புழுவின் நன்மை, ஊட்டநீர் தயாரிப்பு உள்ளிட்டவை குறித்து, செயல்விளக்கம் காட்டப்படும். எனவே, விவசாயிகள், பண்ணையாளர், ஊரக மகளிர், இளைஞர்கள் பங்கேற்கலாம். வரும், 19ம் தேதிக்குள், 04286 - 266345, 266244 என்ற தொலைபேசி எண்களில், முன்பதிவு செய்து கொள்ளலாம்.இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## 7,600 பருத்தி மூட்டை ரூ.1.05 கோடிக்கு ஏலம்

ராசிபுரம் : வேளாண் கூட்டுறவு உற்பத்தியாளர் விற்பனை சங்கத்தில், 7,600 மூட்டை பருத்தி, 1.05 கோடி ரூபாய்க்கு ஏலம் போனது. ராசிபுரம் வேளாண் கூட்டுறவு உற்பத்தியாளர் விற்பனை சங்கம் சார்பில், (ஆர்.சி.எம்.எஸ்.,) கவுண்டம்பாளையம் குடோனில், பருத்தி ஏலம் நேற்று நடந்தது. அதில், 35க்கும் மேற்பட்ட வியாபாரிகள் பங்கேற்றனர். ரகசிய டெண்டர் முறையில் ஏலம் நடந்தது.சீராப்பள்ளி, சிங்காளந்தபுரம், கதிராநல்லூர், பட்டணம், வடுகம், நாமகிரிப்பேட்டை, தொப்பப்பட்டி, வடுகம் முனியப்பம்பாளையம், புதுப்பட்டி, சந்திரசேகரபுரம், குருசாமிபாளையம், கல்யாணி, அம்மாபாளையம், மலையாம்பட்டி, வேலம்பாளையம், பூசாரிபாளையம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் இருந்து, 100க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர். திருச்செங்கோடு, அன்னூர், அவிநாசி, திருப்பூர், சேலம், ஆத்தூர், கொங்ணாபுரம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளை சேர்ந்த வியாபாரிகள் பங்கேற்று ஏலம் எடுத்தனர். ஏலத்தில், 7,600 மூட்டைகள் கொண்டுவரப்பட்டது.அதில், டி.சி.ஹெச்., ரகம், அதிக பட்சம், 4,710க்கும், குறைந்த பட்சம், 4,259 ரூபாய்க்கும் ஏலம் போனது.

ஆர்.சி.ஹெச்., ரகம், அதிக பட்சம், 4,129க்கும், குறைந்த பட்சம், 3,605 ரூபாக்கும் ஏலம் போனது. நேற்று ஒரே நாளில், 7,600 மூட்டை பருத்தி, ஒரு கோடியே, ஐந்து லட்சம் ரூபாய்க்கு ஏலம் போனது.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**<u>நெல் அறுவடை பணி தீவிரம் சாக்குகள் விற்பனை அமோகம்</u>**

காட்டுமன்னார்கோவில், : காட்டுமன்னார்கோவிலில் பெரும்பாலானோர் விவசாயிகள். இங்கு வடவாறு, வடக்கு ராஜன் வாய்க்கால், வீராணம் ஏரி ஆகியவற்றின் மூலம் பாசனம் நடைபெறுகிறது. இந்த ஆண்டு தாமதமாக தண்ணீர் வந்ததால் விவசாய பணிகளை தொடங்குவதில் தாமதம் ஏற்பட்டது. தொடர்ந்து 2 மாதம் மழை, பனிப்பொழிவு பெய்ததால் நடவு செய்யப்பட்ட நெற்பயிர்களில் பெரும் பாதிப்பு ஏற்பட்டது. புகையான், பாக்டீரியா இலை கருகல் நோய், குருட்டு பூச்சி தாக்குதல், தண்டு துளைப்பான் என பல்வேறு நோய்கள் ஏற்பட்டது. இதனால் விவசாயிகள் மிகுந்த சிரமப்பட்டனர். கடந்த சில நாட்களாக அறுவடை பணியும் தொடங்கி நடைபெற்று வருகிறது. அறுவடை காலங்களில் வெளி பகுதிகளில் இருந்து வியாபாரிகள் இந்த பகுதியில் முகா மிட்டு நெல் மூட்டைகளை வாங்கி செல்வர். சில விவசாயிகள் அறுவடை செய்த நெல்களை மூட்டைகளாக தைத்து வீடுகளில் சேமித்து வைப்பர். விலை உயரும் காலங்களில் விற்பனை செய்வர். சிலர் சேமிப்பு கிடங்குகளில் மூட்டைகளாக தைத்து வைப்பர். இவ்வாறு மூட்டைகளாக வைப்பதற்கு ஏதுவாக காங்கேயம் பகுதியில் இருந்து சாக்குகள் விற்பனைக்கு வந்து இறங்கி வருகிறது. சில விவசாயிகள் மொத்தமாக 100க்கும் மேற்பட்ட சாக்குகளை வாங்கி செல்கின்றனர். வியாபாரிகளும் சாக்குகளை அதிக

எண்ணிக்கையில் வாங்கி செல்கின்றனர். அறுவடை நடைபெற்று வருவதால் சாக்கு விற்பனை அதிகரித்து உள்ளதாக கூறப்படுகிறது.

**<u>உளுந்து, பச்சை பயிரில் பூச்சி தாக்கத்தை கட்டுப்படுத்த வழி</u>**

பண்ருட்டி, : பண்ருட்டி வேளாண்மை உதவி இயக்குனர் அலுவலகம் விடுத்துள்ள செய்திகுறிப்பு: பண்ருட்டி வட்டாரத்தில் பூ மற்றும் காய் பருவத்தில் உள்ள உளுந்து மற்றும் பச்சை பயிரில் பச்சை காய் புழு தாக்குதல் காணப்படுகிறது. இதனால் மகசூல் இழப்பு ஏற்படுகிறது. இவற்றை தவிர்ப்பதற்கு ஆரம்ப நிலையில் இலைகள் உதிரும் காயின் உள்ளே புழுக்கள் தலையை உள்ளே விட்டு உடலை வெளிப்பக்கம் வைத்திருக்கும். காய்களில் வட்ட வடிவ துளைகள் இருக்கும். பூச்சியின் முட்டைகள் வட்ட வடிவில் பால்வெள்ளை நிறத்தில் தனித்தனியாக காணப்படும். புழுக்கள் பச்சை நிறத்திலிருந்து பழுப்பு நிறம் வரை மாறி மாறி தோன்றும். பழுப்பு நிற வரிகள் உடலின் பக்கவாட்டில் இருக்கும். கூட்டுப்புழு நிறத்தில் மண் இலை, காய் பயிர், குப்பைகள் காணப்படும். தாய்ப்பூச்சி மங்கிய பழுப்பு கலந்த மஞ்சள் நிறத்தில் தடித்து காணப்படும். இதுபோன்ற அறிகுறிகள் ஏற்படும். இவற்றை கட்டுப்படுத்த ஹெக்டேருக்கு 12 என்ற எண்ணிக்கையில் இனக்கவர்ச்சி பொறி வைக்கலாம். 50 பறவை தாங்கிகள் வைக்கலாம், வளர்ந்த புழுக்களை சேகரித்து அழிக்கலாம். விபரங்களுக்கு பண்ருட்டி வேளாண்மை அலுவலரை அணுகலாம் என தெரிவித்துள்ளார்.

**<u>வானூரில் அதிக பரப்பளவில் உளுந்து சாகுபடி</u>**

வானூர், : வானூர் வட்டத்தில் உளுந்து சாகுபடி தனி பயிராகவும், சவுக்கு, மரவள்ளி, கரும்பு ஆகிய பயிர்களில் ஊடு பயிராகவும், நெல் அறுவடை வயல்களிலும் அதிக பரப்பளவில் விவசாயிகள் சாகுபடி செய்துள்ளனர். உளுந்து பயிர் விதைக்கப்பட்டு பயிர் வளர்ச்சி மற்றும் பிஞ்சுகாய் பருவத்திலும் பரவலாக உள்ளது. விழுப்புரம் மாவட்டத்தில் வானூர் வட்டத்தில் விவசாயிகளுக்கு வேளாண்மை விரிவாக்க மையத்தின் மூலம்

வம்பன்-4 மற்றும் வம்பன்-5 உளுந்து விதை அதிக அளவில் வினியோகிக்கப்பட்டது. உளுந்து சாகுபடியில் அதிக மகசூல் பெறுவதற்கு பயிருக்கு ஊட்டச்சத்து மேலாண்மையாக 2 கிலோ டிஏபி கரைசலை தெளித்து அதிக மகசூல் எடுத்திடலாம். தொழில்நுட்பம் மற்றும் பயிர் பாதுகாப்பு பெறுவதற்கு தங்கள் பகுதியில் உள்ள உதவி வேளாண்மை அலுவலர்கள் அல்லது ஆத்மா வட்டார மற்றும் உதவி தொழில்நுட்ப மேலாளர்களை அதிகம் பயன்படுத்தி கொள்ள வேண்டும் என வானூர் உதவி வேளாண்மை இயக்குநர் துரைசாமி தெரிவித்துள்ளார்.

## <u>கூடலூர், பந்தலூரில் காப்பி அறுவடையில் விவசாயிகள் மும்முரம்</u>

கூடலூர், : நீலகிரி மாவட்ட கூடலூர், பந்தலூர் பகுதிகளில் உள்ள பெருந்தோட்டங்கள் மற்றும் சிறு விவசாயிகளின் தோட்டங்களில் ரொபஸ்ட்ரா வகை காப்பி செடிகள் அதிகளவில் பயிரிடப்பட்டுள்ளது. மழை காலத்தில் பூக்க துவங்கும் காப்பி செடிகள், தொடர்ந்து காய்களாக மாறி பழுக்க துவங்கும், இதனையடுத்து ஜனவரி முதல் பிப்ரவரி வரை அறுவடை பணி நடைபெறும். 2013ம் ஆண்டு பருவ மழை போதியளவு பெய்யாததால் உற்பத்தி குறைந்தது. ஆனால், கடந்த 2014ம் ஆண்டு போதியளவு பருவ மழை பெய்ததால் விளைச்சல் அதிகரித்துள்ளது. இதைத்தொடர்ந்து விவசாயிகள் தற்போது காப்பி அறுவடையில் மும்முரம் காட்டி வருகின்றனர். கடந்த சில வருடங்களாகவே காப்பிக்கு கிலோவிற்கு ரூ.60 முதல் ரூ.70 வரை நல்ல விலை கிடைப்பதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். இந்நிலையில், பல இடங்கிளில் நீர்ப்பனி காரணமாக உரிய காலத்திற்கு முன்னதாகவே செடிகளில் பூக்கள் பூக்க துவங்கியுள்ளன என்றும், இந்த பூக்கள் காய்களாகி பலன் தராது என்றும், இடைகாலத்தில் பூத்த காப்பி செடிகளில் அடுத்த ஆண்டிற்கான உற்பத்தி குறையும் என்றும் விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

## நெருங்குகிறது பொங்கல் திருவளர்சோலையில் செங்கரும்பு அறுவடை தீவிரம்

திருவெறும்பூர், : பொங்கல் பண்டிகை நெருங்கி வருவதை முன்னிட்டு திருவானைக்காவல் அடுத்த திருவளர்ச்சோலை பகுதியில் செங்கரும்பு அறுவடை பணி தீவிரமாக நடந்து வருகிறது. திருச்சி திருவானைக்காவல் அடுத்த திருவளர்ச்சோலை பகுதியில் செங்கரும்பு அதிகளவில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இங்கு மட்டும் சுமார் 110 ஏக்கர் பரப்பளவில் கரும்பு சாகுபடி செய்யப்படுகிறது. இங்கு விளையும் கரும்புகள் சென்னை, மதுரை, கோவை, புதுக்கோட்டை உள்ளிட்ட தமிழகத்தின் பல்வேறு பகுதிகளுக்கும், கேரளம் உள்ளிட்ட வெளி மாநிலங்களுக்கும் அனுப்பிவைக்கப்படுகின்றன. பொங்கல் பண்டிகை நெருங்கிய நிலையில் திருவளர்ச்சோலையில் கரும்பு அறுவடை தீவிரமாக மேற்கொள்ளப் பட்டு வருகிறது. அப்பகுதியில் வெட்டப்பட்ட கரும்புகள் கேரளாவுக்கு அனுப்பிவைக்கப்படுகின்றன. ஒரு கரும்பு ரூ.12 முதல் 19 வரை தற்போது விற்பனை செய்யப்படுகிறது. இருப்பினும், கடந்தாண்டுடன் ஒப்பிட்டு பார்க்கும்போது இந்த ஆண்டு விளைச்சல் குறைவாகவே உள்ளது. கடந்தாண்டு ஒரு ஏக்கரில் 20 ஆயிரம் முதல் 32 ஆயிரம் வரை கரும்புகள் அறுவடை செய்யப்பட்டன. ஆனால், நடப்பாண்டில் ஏக்கருக்கு 12 ஆயிரம் முதல் 22 ஆயிரம் வரை மட்டுமே அறுவடை செய்யப்படுகிறது. மாறி வரும் சீதோஷ்ணம் உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் இந்நிலை ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. இதனால் ஏக்கருக்கு சுமார் ரூ.1.5 லட்சம் வரை செலவு செய்து கரும்பு சாகுபடி செய்துள்ள விவசாயிகள் தங்களுக்கு கட்டுப்படியான விலை கிடைக்குமா? என்ற எதிர்பார்ப்பில் இருந்து வருகின்றனர்.

## நிலக்கடலை சாகுபடியில் அதிக மகசூல் பெற ஜிப்சம் வேளாண் அதிகாரி வழிகாட்டல்

சேதுபாவாசத்திரம்,: சேதுபாவாசத்திர வட்டார வேளா ண்மை உதவி இயக்குநர் பெரியசாமி வெளியிட்டுள்ள செய்திக் குறிப் பில்

கூறியிருப்பதாவது: சேது பாவா வட்டாரத்தில் தற்போது சாகுபடி செய்யப்பட்டு ள்ள நிலக்கடலை பயிரில் அதிக மகசூல் பெற ஜிப்ஸம் இடுவது அவசியமாகும். இவ்வாறு செய்யும்போது ஒரு ஹெக்டே ருக்கு 400கிலோ ஜிப்ஸம் இடுவது மிகவும் அவசியம். ஜிப்ஸம் இடும்போது 200 கிலோவை அடி உரமாகவும், மீதமுள்ள 200 கிலோவை 40 - 45 வது நாளில் பூக்கும் தருணத்தி லும் இட வேண்டும். மேலும் அந்த நேரத்தில் களைகளையும் கொத்தி பயிரைச்சுற்றி நன்கு மண் அணைக்க வேண்டும். மேலும் ஜிப்சத்தின் மொத்த அளவில் பாதியை ரசாயன உரங்களுடன் அடி உரமாக இட வேண்டும். இதனால் பயிரில் நூற்புழுக்களால் ஏற்படும் பாதிப்பு மற்றும் நிலக்கடலையில் உண்டாகும் சொறி போன்ற நோய்களை வெகுவாக குறைக்க முடியும். பூச்சி நோய் தாக்குதலுக்கு எதிர்ப்பு சக்தி கிடைக்கும் ஜிப்ஸம் இட்டு களை கொத்தி மண் அணைப்பதால் கால்சியம் மற்றும் கந்தகச் சத்து குறைபாடுள்ள நிலங்களில் நல்ல விளைச்சல் கிடைக்கும். ஜிப்சம் இடுவதால் நன்கு விழுதுகள் இறங்கி நிலக்கடலை நன்கு ஊறி பொக்கற்ற - நல்ல எடையுடன் கூடிய திரட்சியான பருப்புகள் கிடைப்பதுடன் அதிக மகசூலும் கிடைக்கச் செய்கிறது. இவ்வாறு அவர் அந்த செய்திக் குறிப்பில் கூறியுள்ளார்.

## நீடாமங்கலம் பகுதியில் சம்பா, தாளடி அறுவடை தீவிரம் அதிக மகசூலால் விவசாயிகள் மகிழ்ச்சி

நீடாமங்கலம், : நீடாமங்கலம் பகுதியில் சம்பா, தாளடி நெல் அறு வடை தீவிரமாக நடந்து வருகிறது. நல்ல மகசூல் கிடைத்திருப்பதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். திருவாரூர் மாவட்டம் நீடாமங்கலம் பகுதிகளில் சம்பா சாகுபடியாக 1009, பிபிடி 5204, ஆடுதுறை 38, 46, 40, 43 ஆகிய நெல் ரகம் 25,585 ஏக்கரில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. தாளடி சாகுபடியாக பிபிடி 5204, ஆடுதுறை 38, 46, 40, 43 ஆகிய நெல் ரகம் 22,685 ஏக்கர் என மொத்தம் 48,270 ஏக்கரில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. முன்கூட்டியே நடவு செய்யப்பட்ட நெல்,

ஒரு சில இடங் களில் தற்போது இயந்திரம் மூலம் அறுவடை செய்யப்பட்டு வருகிறது. இதுதொடர்பாக நீடாமங்கலம் வேளாண்மை உதவி இயக்குனர் இளஞ்செழியன் கூறுகையில், முன்கூட்டியே சாகுபடி செய்யப்பட்ட நெல் தற்போது வடுவூர், எடமேலையூர், செருமங்கலம், புள்ளவராயன்குடிகாடு, சோனாப்பேட்டை, பெரம்பூர், காளாச்சேரி உள்ளிட்ட பல்வேறு இடங்களில் இயந்திரம் மூலம் சம்பா அறுவடை செய்யப்பட்டு வருகிறது. அறு வடை செய்யப்படும் நெல் ஏக்கருக்கு 35 மூட்டை முதல் 40 மூட்டை வரை மகசூல் கிடைக்கிறது. இத னால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர் என்றார்.

<u>விவசாயிகள் கம்பு பயிரிட்டால் அதிக வருமானம் பெறலாம்</u>

பழநி, : அதிக வருமானம் பெற விவசாயிகள் கம்பு பயிரிடலாம் என்று வேளாண்துறையினர் ஆலோசனை வழங்கி உள்ளனர். கம்பு பயிரிடுவதற்கு ஜனவரி மற்றும் பிப்ரவரி மாதம் ஏற்ற பருவமாகும். கோ.(சியு)9, ஐசிஎம்வி 221 ஆகியவை ஏற்ற ரகங்கள் ஆகும். ஒரு ஹெக்டேருக்கு 5 கிலோ விதை தேவைப்படும். 45 சென்டி மீட்டருக்கு * 15 சென்டி மீட்டர் என்ற இடைவெளியில் விதைக்க வேண்டும். பொட்டாசியம் டை ஹைட்ரஜன் பாஸ்பேட் 20 கிராமுடன் ஒரு லிட்டர் நீர் கலந்த கரைசலில் விதைகளை 6 மணி நேரம் ஊறவைத்து உலர்த்திய பின் விதைக்க வேண்டும். ஒரு ஹெக்டேருக்கு 10 பொட்டலம் (2 ஆயிரம் கிராம்) அசோஸ்பைரில்லம் மற்றும் 25 கிலோ தொழுஉரம் கலந்து தூவ வேண்டும். தொழுஉரம் ஹெக்டேருக்கு 12.5 டன் என்ற அளவில் இருக்க வேண்டும். நுண்ணுட்டச்சத்து ஹெக்டேருக்கு 12.5 டன் என்ற அளவில் இருக்க வேண்டும். இறவை சாகுபடியாக இருந்தால் தழைச்சத்து, மணிச்சத்து மற்றும் சாம்பல் சத்து ஆகியவை ஹெக்டேருக்கு 90:45:45 என்ற அளவில் இருக்க வேண்டும். மானாவாரியாக இருந்தால் 40:20:0 என்ற அளவில் இருக்க வேண்டும். விதைத்த 15 மற்றும் 30வது நாளில் களையெடுக்க வேண்டும். குருத்து ஈ தாக்குதலில் இருந்து தப்பிக்க 5%

வேப்பங்கொட்டை சாறு மற்றும் 1% நீம்மசால் தெளிக்க வேண்டும். கதிர் நாவாய்ப்பூச்சி தாக்குதலில் இருந்து தப்பிக்க 25 கிலோ கார்பரில் 10% தூள் 50% பூவெடுக்கும் சமயத்தில் தூவ வேண்டும். அடிச்சாம்பல் நோயில் இருந்து தப்பிக்க ஹெக்டேருக்கு 500 கிராம் மெட்டலாக்ஸில் (அல்லது) 1000 கிராம் மேன்கோசெப் தெளிக்க வேண்டும். துரு நோய் தாக்குதலில் இருந்து தப்பிக்க ஹெக்டேருக்கு நனையும் கந்தகம் 2.5 கிலோ அல்லது மேன்கோசெப் 1 கிலோ தெளிக்க வேண்டும். இலைகள் மஞ்சள் நிறமாக மாறி தானியங்கள் கடினமான பிறகு கதிர்களை தனியாக அறுவடை செய்ய வேண்டும். விவசாயிகள் இதுதொடர்பான கூடுதல் தகவல்களுக்கு அந்தந்த பகுதியில் உள்ள வேளாண் விரிவாக்க மையங்களை அணுகலாமென பழநி வட்டார வேளாண் உதவி இயக்குநர் சாந்தாமணி தெரிவித்துள்ளார்.

**<u>கலெக்டர் அலுவலகத்தில் 23ல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்</u>**

சிவகங்கை, : சிவகங்கையில் விவசாயிகள் குறைதீர் கூட்டம் ஜனவரி 23ல் நடக்க உள்ளது. மாவட்ட நிர்வாகம் சார்பில் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது: 'மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம் ஜனவரி 23ம் தேதி காலை 11 மணிக்கு சிவகங்கை கலெக்டர் அலுவலகத்தில் நடக்க உள்ளது. கலெக்டர் தலைமையில் நடக்கும் இக்கூட்டத்தில் வேளாண், தோட்டக்கலை, மின்வாரியம், குடிநீர் உள்ளிட்ட பல்வேறு துறைகளை சார்ந்த உயர் அலுவலர்கள் கலந்துகொள்ள உள்ளனர். இதில் மாவட்டம் முழுவதும் உள்ள விவசாயிகள் கலந்துகொண்டு விவசாயம் சார்ந்த குறைகளை தெரிவித்து அதனை நிவர்த்தி செய்து கொள்ளலாம்.

**<u>கோவில்பட்டியில் கரும்பு விற்பனை அமோகம் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு 15 எண்ணம் கொண்ட கட்டு ரூ.300</u>**

கோவில்பட்டி, : கோவில்பட்டியில் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு கரும்பு விற்பனை துவங்கியுள்ளது. தமிழர்களின் முக்கிய பண்டிகையாக தைப்பொங்கலை முன்னிட்டு தங்களது இல்லங்கள் முன்பு வண்ண

கோலமிட்டு கரும்பு, வாழை தோரணங் களை கட்டி சர்க்கரை, பொங்கலிட்டு சூரிய பகவானை வழிபடுவார்கள். இந்தாண்டு தமிழர்களின் திருநாளாம் தைத்திரு நாள் ஜன.15ம் தேதி கொண்டாடப்படுகிறது. பொங் கலை முன்னிட்டு கோவில் பட்டி நகரில் கரும்பு விற்பனை துவங்கியுள்ளது. மதுரை மேலூர், திண்டுக்கல், தஞ்சாவூர் உள் ளிட்ட தமிழகத்தின் பல் வேறு பகுதிகளில் இருந்து கோவில்பட்டி மார்க்கெட்டிற்கு லாரி மற்றும் வேன் கள் மூலம் கரும்பு கட்டுகள் வரத்துவங்கியுள்ளன. கோவில்பட்டி நகரில் மார்க்கெட், மெயின்ரோடு, புதுரோடு, எட்டயபுரம் ரோடு, மாதாங்கோவில் தெரு உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் வியாபாரிகள் கரும்பு கட்டுகளை விற் பனை செய்து வருகின்றனர். 15 எண்ணம் கொண்ட ஒரு கரும்பு கட்டுகள் ரூ.300 முதல் 350 வரை விற்கப்படுகிறது. பொங்கல் பண்டிகைக்கு இன்னமும் 3 நாட் களே உள்ள நிலையில் பெரும்பாலான வியாபாரி கள் மற்றும் பொதுமக்கள் கரும்புகளை கட்டுகளை ஆர்வமுடன் வாங்கி செல்கின்றனர்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**<u>கோவில்பாளையம் கிளை கால்வாயில் தண்ணீர் திறப்பு 3, 755 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும்</u>**

கோவில்பாளையம் கிளை கால்வாயில் இருந்து நேற்று தண்ணீர் திறக்கப்பட்டது. இதன் மூலம் 3 ஆயிரத்து 755 ஏக்கர் நிலங்கள் பாசன வசதிபெறுகின்றன.

பி.ஏ.பி.திட்டம்

பரம்பிக்குளம்- ஆழியாறு திட்டத்தில் (பி.ஏ.பி.) லட்சக் கணக்கான ஏக்கர் விவசாய நிலங்கள் பாசன வசதி பெறு கின்றன. பரம்பிக்குளம் அணையில் இருந்து திறந்து விடப்படும் தண்ணீர் சர்க் கார்பதியில் மின் உற்பத்திக்கு பிறகு காண்டூர் கால்வாய் மூலம் திருமூர்த்தி அணைக்கு கொண்டு செல்லப்படுகிறது. அங்கிருந்து திறக்கப்படும் தண்ணீர் பிரதான கால்வாயில் இருந்து கிளை கால்வாய்கள் மூலம் விவசாயிகளின் பாசன

நிலங்களுக்கு சென்றடையும். தண்ணீர் திறப்பு இந்த நிலையில் திருமூர்த்தி அணையில் இருந்து நேற்று முன்தினம் 3-வது மண்டல பாசனத்திற்கு தண்ணீர் திறந்து விடப்பட்டது. இதைத் தொடர்ந்து நேற்று காலை பிரதான கால்வாயில் இருந்து கோவில்பாளையம் கிளை கால்வாயில் தண்ணீர் திறந்து விடும் நிகழ்ச்சி நடைபெற் றது. நிகழ்ச்சிக்கு பொதுப்பணித் துறை செயற் பொறியாளர் செல்வராஜ் தலைமை தாங்கி னார். உதவி செயற்பொறி யாளர் ரங்கநாதன், உதவி பொறியாளர் சக்திகுமார், முன்னாள் பகிர்மான குழு தலைவர் ஆண்டிபாளையம் நல்லதம்பி ஆகியோர் முன் னிலை வகித்தனர். இதில் முத்துகருப்பண்ணசாமி எம்.எல்.ஏ. கலந்து கொண்டு தண்ணீரை கால்வாயில் திறந்து விட்டார். பின்னர் கால்வாயில் பெருக்கெடுத்து ஓடிய தண்ணீர் மீது மலர்கள் தூவப்பட்டன. நிகழ்ச்சி யில் பேரூராட்சி மன்ற தலைவர் சோமசுந்தரம், மாவட்ட கவுன்சிலர் ராதா மணி, ஒன்றிய குழு உறுப்பினர் செந்தில்பிரபு, கிராம நீரினை பயன்படுத்துவோர் சங்க முன்னாள் தலைவர்கள் முத்துமாணிக்கம், மயில்சாமி, கருப்புசாமி உள்பட பலர்கலந்துகொண்டனர்.

3,755ஏக்கர்நிலங்கள்

கோவில்பாளையம் கிளை கால்வாய் மூலம் என்.சந்திராபுரம், நெகமம், காளியப்பம்பாளையம், வகுத்தம்பாளையம், தேவணாம்பாளையம், கக்கடவு, காணியாலாம்பாளையம், முள்ளுப்பாடி, எஸ். மேட்டுப் பாளையம் ஆகிய கிராமங்களில் உள்ள சுமார் 3 ஆயிரத்து 755 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன. இந்த கால்வாயில் இருந்து சுற்றுக்கு 7 நாள் வீதம் 4 சுற்று தண்ணீர் விடப்படும் என பொதுப்பணித்துறை அதிகாரி கள் தெரிவித்தனர்.

**<u>தோவாளை மார்க்கெட்டில் பூக்கள் விலை உயர்வு மல்லிகை கிலோ ரூ.1000–க்கு விற்பனை</u>**



குமரி மாவட்டத்தில் நாகர்கோவில் அருகே உள்ள தோவாளையில் பூ மார்க்கெட் உள்ளது. இங்கு குமரி மாவட்டத்தில் இருந்து மட்டுமில்லாமல் நெல்லை, மதுரை, கேரளா உள்பட பல இடங்களில் இருந்தும் பூக்கள் விற்பனைக்காக கொண்டுவரப்படுகிறது. பூக்கள் மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்கப்படும். எப்பொழுது பார்த்தாலும் வியாபாரிகள் கூட்டம் அதிகமாக காணப்படும். இந்த நிலையில் நேற்று பூக்கள் விலை கடுமையாக உயர்ந்தது. நேற்று முன்தினம் ரூ.600–க்கு விற்கப்பட்ட மல்லிகை பூ நேற்று ரூ.1000–த்திற்கு விற்கப்பட்டது. ரூ.400–க்கு விற்கப்பட்ட பிச்சி ரூ.750–க்கு விற்கப்பட்டது. இது போல முல்லை ரூ.600–க்கும், வாடாமல்லி ரூ.50–க்கும், கேந்தி ரூ.50–க்கும், பட்டன் ரோஸ் ரூ.150–க்கும், ஸ்டெம்புரோஸ் ரூ.150–க்கும், சிவந்தி ரூ.70–க்கும், வெள்ள சிவந்தி ரூ.100–க்கும் விற்பனை செய்யப்பட்டது. மல்லிகை மற்றும் பிச்சி பூக்களின் விலை உயர்வு குறித்து பூ வியாபாரி விஸ்வநாதன் கூறுகையில் ''பனிப்பொழிவின் காரணமாக மல்லிகை, பிச்சி பூக்களின் வரத்து குறைந்துள்ளது. எனவே குறைந்த அளவில் இருக்கும் பூக்களை வியாபாரிகள் போட்டி போட்டு ஏலம் எடுத்து செல்கின்றனர். இதனால் விலை அதிகரித்துள்ளது'' என்று கூறினார்.

**<u>நெற்பயிர்களில் நோய் தாக்குதல் குறித்து வேளாண்மைத்துறை அதிகாரிகள் ஆய்வு செய்து வருகின்றனர் கலெக்டர் பழனிசாமி தகவல்</u>**



நாகை மாவட்டத்தில் பநெற்பயிரில் பூச்சிநோய் தாக்குதலை குறித்து வேளாண்மைத்துறை அதிகாரிகள்ஆய்வு செய்து வருகின்றனர் என்று கலெக்டர் பழனிசாமி தெரிவித்துள்ளார்.

புகையான் பூச்சி

நாகை மாவட்ட கலெக்டர் பழனிசாமி அறிக்கை வெளியிட்டுள்ளார். அதில் அவர் கூறியிருப்பதாவது:–

நாகை மாவட்டத்தில் 1 லட்சத்து 2 ஆயிரத்து 336 எக்டேரில் சம்பா பயிரும், 28 ஆயிரத்து 20 எக்டேரில் தாளடி பயிரும் தற்போது சாகுபடி செய்யப்பட்டுள்ளது. நாகை மாவட்டத்தின் பல பகுதிகளில் வேளாண்மை துறையை சார்ந்த விரிவாக்க அலுவலர்கள் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர்கள் தலைமையில் நெற்பயிரில் பூச்சிநோய் தாக்குதல் சம்பந்தமாக ஆங்காங்கே வயல் ஆய்வு பணிகள் மேற்கொண்டு வருகின்றனர். இந்த ஆய்வு செய்த வகையில் புகையான் பூச்சிதாக்குதல் மற்றும் நெற்பழ நோய் தாக்குதல் மயிலாடுதுறை, குத்தாலம், செம்பனார்கோவில் வட்டாரங்களில் ஒருசில இடங்களில் காணப்படுகிறது. இரவு நேர குறைந்த வெப்பநிலை, கடுமயான பனிப்பொழிவின் காரணமாகவும் இத்தகைய பூச்சிநோய் தாக்குதல் காணப்படுகிறது.

பயிர் பாதுகாப்பு நடவடிக்கை

இதில் புகையான் பூச்சிதாக்குதல் தென்பட்ட வயல்களில் தண்டின் அடிப்பாகத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட பழுப்பு நிற தத்துப்பூச்சிகள் காணப்படும். இவை பயிரின் சாற்றினை உறிஞ்சி எடுப்பதால் பயிர் வட்ட வட்டமாக புகைந்ததுபோல் காணப்படும். புகையான் பாதித்தவயல்களில் முதலில் தேங்கியுள்ள தண்ணீரை உடனடியாக வடிகட்ட வேண்டும். வயல்களில் சூரிய வெளிச்சம் நன்கு படுமாறு பட்டத்தினை பிரித்து காற்றோட்டம் ஏற்படுத்திட வேண்டும். பின்னர் இமிடாகுளோபிரிட் 17.8 எஸ்எல்50 மி.லி. அல்லது டைகுளோர்வாஸ் 76டபள்யூ.எஸ்.இ. 150 மி.லி. அல்லது தையோமீத்தாக்சம் 25டபள்யூ.ஜி. 100 கிராம் அல்லது பியுபுரோபெசின் 25 சதவீதம் எஸ்.எல். 330மி.லி.

இவற்றில் ஏதேனும் ஒரு மருந்தினை ஏக்கருக்கு 60 லிட்டர் நீரில் கலந்து விசை தெளிப்பான் கொண்டு தெளிக்க வேண்டும். நெற்பழநோய் தாக்குதல் ஏற்பட தற்போதுள்ள சுழ்நிலை சாதகமாக உள்ளதால் புரோபிகோனோசோல் 25 சதவீதம் இ.சி. மருந்தினை ஒரு ஏக்கருக்கு 200மி.லி. வீதம் 200 லிட்டர் நீரில் கலந்து கைத்தெளிப்பான் கொண்டு தெளிக்க வேண்டும். இந்த பயிர் பாதுகாப்பு நடவடிக்கைகளை நாகை மாவட்ட விவசாயிகள் உடனடியாக மேற்கொள்ள வேண்டும். இவ்வாறு அவர் அந்த அறிக்கையில் கூறியுள்ளார்.

**<u>தாராபுரம் பகுதிகளில் ஆயிரக்கணக்கான ஏக்கரில் நெல் சாகுபடி</u>**



தாராபுரம் பகுதிகளில் இந்த ஆண்டு பருவமழை அதிகளவில் பெய்ததாலும், அமராவதி அணையில் அதிகளவில் தண்ணீர் இருப்பதாலும் விவசாயிகள் அமராவதி பழைய மற்றும் புதிய ஆயக்கட்டு பாசன பகுதிகளில் அதிகளவில் நெற்பயிர்கள் சாகுபடி செய்ய முடிவு செய்தனர். அதன்படி அமராவதி பழைய ஆயக்கட்டு பாசன வாய்க்கால் களான தளவாய்பட்டினம் வாய்க்காலில் 950 ஏக்கரும், கொளிஞ்சிவாடி வாய்க்காலில் 3,225 ஏக்கரும், தாராபுரம் வாய்க்காலில் 2,417 ஏக்கரும், அலங்கியம் வாய்க்காலில் 1,054 ஏக்கரும் என மொத்தம் 7,646 ஏக்கரில் நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. குறிப்பாக விவசாயிகள் ஏ.டி.டி.39, ஏ.டி.டி.45 என்ற நெல்ரகங்களை நடவு செய்துள்ளனர். ஏனெனில் இந்த வகை நெல் ரகங்கள் அதிக நோய் எதிர்ப்பு சக்தியும், கூடுதல் மகசூலும் தரக்கூடியவை. தற்போது தாராபுரம் பகுதியில் சாகுபடி செய்யப்பட்டுள்ள நெற்பயிர்களில் கதிர்கள் வெளியே வந்து கொண்டிருக்கின்றன. சில இடங்களில் நெல்மணிகள் பால்பிடித்துள்ளது. இவை இன்னும் 15 முதல் 20 நாட்களில் அறுவடைக்கு தயாராகி விடும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

## உணவு உற்பத்தியில் தமிழகம் தொடர்ந்து முதலிடம் வகிக்கிறது அமைச்சர் அக்ரி கிருஷ்ணமூர்த்தி பேச்சு



உணவு உற்பத்தியில் தமிழகம் தொடர்ந்து முதலிடம் வகிப்பதாக அமைச்சர் அக்ரி கிருஷ்ணமூர்த்தி தெரிவித் தார். முப்பெரும் விழா தமிழ்நாடு வேளாண்மை தொழில்நுட்ப அலுவலர்கள் சங்கத்தின் மாநில அளவிலான முப்பெரும் விழா திருவண் ணாமலையில் நடந்தது. மாநில தலைவர் துரை.சந் திரசேகரன் தலைமை தாங்கி னார். விழாவில் தமிழக வேளாண் மைத்துறை அமைச்சர் அக்ரி கிருஷ்ணமூர்த்தி கலந்து கொண்டு வேளாண்மை தொழில்நுட்ப கையேட் டினை வெளியிட்டுபேசினார்.

மத்தியஅரசுவிருது

அப்போது தமிழகம் அனைத்து துறைகளிலும் வளர்ச்சிப்பாதையில் செல்ல, இந்தியாவிலேயே தமிழகத்தை முதன்மை மாநிலமாக ஆக்க வேண்டும் என்பதற்காக ஜெய லலிதா எண்ணற்ற திட்டங் களை செயல்படுத்தி வந்தார். வேளாண்மைத்துறையில் பசுமை புரட்சியை ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கத் தோடு இரு மடங்கு உற்பத்தி, 3 மடங்கு வருமானம் என விவசாயிகளின் வாழ்வில் ஒளி ஏற்ற வேண்டும் என்ற நோக் கத்தில் செயல்பட்டார். அதன்விளைவாக 2011- 2012-ம் ஆண்டில் உணவு உற் பத்தியில் 100 லட்சம் மெட்ரிக் டன்களை கடந்து சாதனை படைத்ததற்காக இந்திய அள வில் தமிழகம் முதன்மை மாநி லமாக தேர்வு செய்யப்பட்டு மத்திய அரசால் கிருஷி கர்மன் விருதும், ரூ.2 கோடிபரிசும்வழங்கியது.

தொடர்ந்துமுதலிடம்

மேலும் இந்தியாவே திரும்பி பார்க்கும் வகையில் பயறு வகை உற்பத்தியில் முதன்மை மாநிலமாக வந்தமைக்காக மீண்டும் கிருஷி கர்மன் விரு தும், ரூ.2 கோடி பரிசும் வழங்க மத்திய அரசால் தமிழகம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. இதுவரை 6-க்கும் மேற்பட்ட தேசிய

விருதுகளை தமிழகம் பெற்றுள்ளது. குறிப்பாக கடந்த 8 மாதங்களில் மட்டும் 4 விருதுகளை தமிழகம் பெற்றுள்ளது. ஜெயலலிதாவின் வழிகாட்டுதலோடு தமிழகம் உணவு உற்பத்தியில் தொடர்ந்து முதலிடம் வகித்துவருகிறதுஎன்றுகூறினார்.

கோரிக்கைமனு

கூட்டத்தில் ஊதியஉயர்வு, பதவி உயர்வு உள்ளிட்ட கோரிக்கை அடங்கிய மனுவை வேளாண்மை தொழில்நுட்ப வல்லுனர்கள் சங்க மாநில நிர்வாகிகள், அமைச்சர் அக்ரி கிருஷ்ணமூர்த்தியிடம் வழங் கினர். இதில் எம்.எல்.ஏ.க்கள் ஏ.கே.அரங்கநாதன், சுரேஷ் குமார், மாவட்ட ஊராட்சிக் குழு தலைவர் எம்.எஸ். நைனாக்கண்ணு, விவசாயி கள் சங்க தலைவர் வேட்ட வலம் மணிகண்டன், வேளா ண்மை தொழில்நுட்ப வல்லு னர்கள் சங்க மாவட்ட தலை வர் சீனுவாசன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.